ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,127 புரட்டாசி மாதம்

# இந்துக்களிடையே மறுமலர்ச்சிச் சிந்தனைகளை உருவாக்குதல்



'இந்துக்களை இந்துக்களாக வாழச் செய்ய வேண்டும்', 'இந்துக்களுக்கு இந்துமதத்தின் மீது நம்பிக்கையும் மதிப்பும், மரியாதையும் ஏற்படும்படிச் செய்ய வேண்டும்.'

இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துவேத இந்துமதத் தலைமை ஆச்சாரிய குருபீடம் அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள்

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,127ஆம் ஆண்டின் புரட்டாசி மாத வெளியீடு.**

***தலைப்பு:*- "இந்துக்களிடையே மறுமலர்ச்சிச் சிந்தனைகளை உருவாக்குதல்"**

# உள்ளுறை

1. **"இந்துமதத்தின் இரு கண்களே புத்தமும் சமணமும்"** - சமண மதத்தின் முதன்மையான பூசாவாசகம் ஒன்றின் விளக்கம்.
2. **"இந்துவேத மாநாட்டு அழைப்பு"** - தஞ்சையில் நடத்தப்பட்ட இந்துவேத மாநாட்டுக்காக வெளியிடப்பட்ட அறிக்கை எண் 1361
3. **"மதம் மக்களுக்கு மருந்து"** - பதினெண்சித்தர்களின் பதினெட்டு இலக்கியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வாசகங்கள்.
4. **"குருபாரம்பரிய நூல்களின் தொகுப்பு"** - சித்தர்களின் வரலாற்று நூல்கள் குருபாரம்பரியம் என்ற பெயரில் தொகுக்கப்பட்ட நூல்களின் பட்டியல்.
5. **"குருபாரம்பரியம் தரும் ஆச்சரிய-மாச்சரியச் செய்திகள்"** - இந்தத் தலைப்பின் கீழ் 'குருதேவர்' என்ற அறிக்கைக்காகத் தயாரிக்கப்பட்ட சில சுருக்க விளக்கக் கட்டுரைகள்.
6. **"இந்துக்களின் வாழ்வு மறுமலர்ச்சி அடையப் பாடுபடுதல்"** - தலைமைப்பீடத்திலிருந்து குருதேவர் 1996இல் விடுத்த அஞ்சல் வடிவக் கட்டுரை.
7. **"இந்துக்களிடையே மறுமலர்ச்சிச் சிந்தனைகளை உருவாக்குதல்"** - குருதேவர் 1996இல் விடுத்த அஞ்சல் வடிவக் கட்டுரை.
8. **"கூடுவிட்டுக் கூடுபாய்தல்"** - பதினெண்சித்தர் நெறிப் பள்ளிக்காக வழங்கிய ஒரு சுருக்கமான குறிப்பு.
9. **"காவிரியாற்றங்கரைக் கருவூரரின் குருவாசகம்"** - குருவாசகத்திலிருந்து ஒரு சில வரிகள்.

# இந்துமதத்தின் இரு கண்களே புத்தமும் சமணமும்

## அருட்போர் ஆயத்தப் பணி கடித எண் - 8

**இந்துவேத மதமான இந்துமதமே அனைத்துக்கும் தாய். இந்துமதத்தின் இரு கண்களே புத்தமும் சமணமும்.**

17-7-92 மாலை 6:20,
தலைமைப்பீடம்.

### நமசிவாய விளக்கம்

### சமணர்களின் மகாமந்திரமும் அதன் பொருளும்

1) *நமோ அரிஹந்தாணம்* (அருகர்களுக்கு வணக்கம்)
2) *நமோ சித்தாணம்* (சித்தர்களுக்கு வணக்கம்)
3) *நமோ ஆயிரியாணம்* (ஆச்சாரியார்களுக்கு வணக்கம்)
4) *நமோ உவஜ்யாயாணம்* (வாத்தியார்களுக்கு வணக்கம்)
5) *நமோ லோயே சவ்வ சாஹூணம்* (இவ்வுலகத்தில் உள்ள அனைத்து நற்துறவிகளுக்கும் வணக்கம்)

*ஏசோ பன்ச நமோக்காரோ* | இந்த ஐந்து வணக்கங்களும்
*சவ்வ பாவ பனுசனோ* | அனைத்து பாவங்களையும் அழிக்க வல்லது
*மங்களானன்ச சவ்வேசிம்* | அனைத்து மந்திரங்களிலும் இந்த மந்திரம்
*பதமம் ஹவயி மங்களம்* | முதன்மையான உயர்ந்த மந்திரமாகும்.

# விளக்கங்கள்:

(1) பத்தர் (2) பத்தியார் (3) புத்தர் (4) புத்தியார் (5) போத்தர் (6) போத்தியார் (7) முத்தர் (8) முத்தியார் (9) சீவன்முத்தர் (10) சீவன்முத்தியார் (11) அருவ சித்தியார் (12) அருவுருவ சித்தியார் (13) உருவ அருவ சித்தியார் (14) உருவ சித்தியார்.

இவற்றைத்தான் சமண முனிவர்களான தீர்த்தங்கரர்கள் 14 ஞானங்கள் என்று கூறுகின்றுர்கள். இது பதினெண்சித்தர்கள் அருளிய இந்துவேதத்திலும், அவர்கள் தோற்றுவித்த இந்துமதத்திலும் இருக்கின்ற இந்த 14 வகைப்பட்ட ஞானங்கள்தான் தீர்த்தங்கரர்களால் குறிப்பிடப்படுகின்றன. இவர்கள் கூறுகின்ற மகாமந்திரம் என்பது இந்துவேதம் கூறுகின்ற நமசிவாய விளக்கம். சித்தர்கள் குறிப்பிடுகின்ற 5 எழுத்து விளக்கம், ஐம்பூத விதி விளக்கம் என்று இந்துவேதத்திலும், இந்துமதத்திலும் கூறப்படுகின்றது.

தமிழ்மொழியிலிருந்து பிராகிருதம், பாலி என்ற இரண்டு மொழிகள் தமிழின் இரு கண்களாக உருவாக்கப்பட்டன. இந்துமதத்திலிருந்து சமண மதமும், புத்த மதமும் இரு கண்களாக உருவாக்கப்பட்டன.

எனவே இந்துவேதம் எனும் ஆலமரத்தின் (1) இலேகளாகவோ, (2) கிளேகளாகவோ, (3) விழுதுகளாகவோதான் இந்த உலகத்திலுள்ள அத்தனே மதங்களும் உருவாகுகின்றன என்று பதினெண்சித்தர்கள் நேரடியாக, தெளிவாகக் குறிப்பிடுகின்றுர்கள்.

பதினெண்சித்தர்களுடைய இருடி வேதம் எனப்படும் இருக்கு வேதம் (என்றென்றும் இருக்கின்ற வேதம், இருக்கப் போகின்ற வேதம்), அசுர வேதம் (அசுர சித்திக்கு உரியது), யாம வேதம் (சாமம் எனும் இரவுச் சித்திக்கு உரியது), அதர்வான வேதம் (வானத்தை எல்லேயாகக் கொண்டு அதற்கும் அப்பாற்பட்ட

அனைத்துவகைப்பட்ட எல்லைகளையும் கடந்து செல்லக் கூடிய சித்திகளைப் பெறுவதற்கும் பயன்படக் கூடியது. 1. வானம், 2. விண், 3. விசும்பு, 4. ஆகாயம், 5. ககனம், 6. பரவெளி, 7. பாழ்வெளி எனும் ஏழு இடங்களுக்கும் உரிய சித்திகளைத் தரக்கூடிய வேதம்தான் அதர்வான வேதம்) இப்படி நான்கு வேதங்களை பதினெண்சித்தர்கள் வழங்கி இருக்கிறார்கள். இந்த நான்கு வேதங்களையும் தீர்த்தமான = தீர்வான = முடிவான புலமையை பத்திநிலையை, சத்திநிலையை, சித்திநிலையை, முத்திநிலையை ... கைவரப் பெற்றவர்கள்தான் முத்தர், முத்தியார், சீவன்முத்தர், சீவன்முத்தியார் எனும் 4 வகைப்பட்ட தீர்த்தங்கரர்கள் தோன்றுகிறார்கள். இந்த 4 வகைப்பட்ட தீர்த்தங்கரர்கள் மூலம்தான் சமணத் தத்துவம் = அம்மணத் தத்துவம், = முழு நிர்வாண தத்துவம் எனப்படும் சமணத் தத்துவம் உருவாயிற்று.

இதேபோல் முழுமையாக அறிவு நிலையில் இருக்கக் கூடிய (1) போத்தர், (2) போத்தியார் எனும் இருவரும் (3) புத்தர், (4) புத்தியார் எனும் இருவரும் ஆக 4 வகைப்பட்டவர்கள் உண்டாக்கிய தத்துவம்தான் பௌத்தம் = புத்தம். இந்த நான்கும் பதினெண்சித்தர்களுடைய நான் வேதங்களிலிருந்து உண்டானவை. புத்தர், புத்தியார், போத்தர், போத்தியார் எனும் நால்வரும் பௌத்தத்தின் நான்கு வகைப்பட்ட பௌத்த தலைவர்கள் அல்லது பௌத்தர்கள். இந்த புத்தத்திற்கும், சமணத்திற்கும் அடிப்படை பத்தர், பத்தியார் என்பவர்கள். இதுதான் பதினெண்சித்தர்களுடைய இந்துவேதம், இந்து மதம். எனவேதான் இந்த உலகில் தோன்றக் கூடிய எல்லா வேதங்களும், மதங்களும் பதினெண்சித்தர்களுடைய இந்துவேதம் இந்துமதம் எனும் ஆல மரத்தின் இலைகளாகவோ, கிளைகளாகவோதான் இருக்க முடியும், அல்லது தோன்றுகின்றன.

புத்த ஞானம் = கௌதம் என்று பதினெண்சித்தர்களால் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும் அழைக்கப்படும்.

தீர்த்தங்கரர் ஞானம் = சௌதம் என்று பதினெண் சித்தர்களால் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும் குறிப்பிடப்படுகிறது.

இந்து வேதத்தின் (7) ஏழு ஞானங்கள்.

இந்து மதத்தின் ஏழு மதங்கள்.

இந்து வேதத்தின் ஏழு வேதங்கள்.

(1) கௌதம் = கௌரீசுவன், கௌரீசுவரி.

(2) சௌதம் = சௌரீசுவரன், சௌரீசுவரி.

(3) தௌதம் = தௌரீசுவரன், தௌரீசுவரி

(4) பௌதம் = பௌதீசுவரன், பௌதீசுவரி.

(5) நௌதம் = நௌதீசுவரன், நௌதீசுவரி.

(6) மௌதம் = மௌதீசுவரன், மௌதீசுவரி.

(7) வௌதம் = வௌதீசுவரன், வௌதீசுவரி.

இவை ஒவ்வொன்றிலும் இவை சேர்த்து மொத்தம் எட்டு எட்டு வகைகள் உண்டு.

**எடுத்துக்காட்டு:-** 1. கௌரீசுவரன், 2. கௌரீசுவரி, 3. ஆதிகௌரீசுவரன், 4. ஆதிகௌரீசுவரி, 5. கௌரீசுவராச்சாரியார், 6. ஆதிகௌரீசுவராச்சாரியார், 7. கௌரிசங்கராச்சாரியார், 8. ஆதிகௌரி சங்கராச்சாரியார்.

8 x 7 = 56 *சமண லோகங்கள்* = 56

56 என்ற எண்ணிக்கைக்கு விளக்கம் இதுவே. எனவே சமண மதத்தின் முழுமையான விளக்கம் பதினெண்சித்தர்களின் இந்து வேதத்தில்தான் இருக்கிறது. இந்து வேதம் தமிழ்மொழியில்தான் இருக்கிறது. எனவேதான் தீர்த்தங்கரர்கள் அருளிய மகாமந்திரத்திலேயே சித்தர்களைத்தான் போற்றுகிறார்கள். இதிலிருந்து சமண மதம் இந்து மதத்தின் ஓர் அங்கம் என்பது தெளிவாகும்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல் கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்தது. யாருடைய கையெழுத்து என்ற குறிப்பு இல்லை.//**

**அறிக்கை எண்: 1361**

# இந்துவேத மாநாட்டு அழைப்பு

**பதினெண்சித்தர் மடம்**

**காரனேடை, சென்னை**

தஞ்சையில் மே மாதத்தில் இந்துவேத மாநாடு நடக்கிறது.

1. இந்துமதத்தின் மூலவர்கள் தமிழர்கள்தான்!
2. இந்துமதத்தின் காவலர்கள் தமிழர்கள்தான்!
3. இந்துமதத்தின் வேதவித்துக்கள் தமிழர்கள்தான்!
4. இந்துமதத்தின் ஞானச் செல்வங்கள் தமிழர்கள்தான்!
5. இந்துமதத்தின் தத்துவ நாயகங்கள் தமிழர்கள்தான்!
6. இந்துமதத்தின் மூலத் தலைவர்கள் தமிழர்கள்தான்!
7. இந்துமதத்தின் மூல ஆச்சாரியார்கள் தமிழர்கள்தான்!
8. இந்துமதத்தின் மூலக் குருபீடங்கள் தமிழர்கள்தான்!
9. இந்துமதத்தின் மூலப் பண்டாரங்கள் தமிழர்கள்தான்!
10. இந்துமதத்தின் மூல ஆதீனங்கள் தமிழர்கள்தான்!
11. இந்துமதத்தின் மூலத் தம்பிரான்கள் தமிழர்கள்தான்!
12. இந்துமதத்தின் மூலக் குருமகாசன்னிதானங்கள் தமிழர்கள்தான்!
13. இந்துமதத்தின் மூலமடங்கள் தமிழர்கள்தான்!
14. இந்துமதத்தின் மூலக் கடவுள்கள் தமிழர்கள்தான்!
15. இந்துமதத்தின் பூசைமொழி தமிழ்மொழிதான்!
16. இந்துமதத்தின் தேவமொழி தமிழ்மொழிதான்!
17. இந்துமதத்தின் தெய்வமொழி தமிழ்மொழிதான்!

18. இந்துமதத்தின் கடவுள்மொழி தமிழ்மொழிதான்!
19. இந்துமதத்தின் அத்தர, அத்திர, அத்திற மொழி தமிழ்மொழிதான்!
20. இந்துமதத்தின் சாத்தர, சாத்திர, சாத்திற மொழி தமிழ்மொழிதான்!
21. இந்துமதத்தின் சூத்தர, சூத்திர, சூத்திற மொழி தமிழ்மொழிதான்!
22. இந்துமதத்தின் தோத்தர, தோத்திர, தோத்திற மொழி தமிழ்மொழிதான்!
23. இந்துமதத்தின் நேத்தர நேத்திர நேத்திற மொழி தமிழ்மொழிதான்!
24. இந்துமதத்தின் வேத்தர, வேத்திர, வேத்திற மொழி தமிழ்மொழிதான்!
25. இந்துமதத்தின் நேம, நியம, நிடத, நிட்டை, நீதி முதலிய அனைத்தும் வாழும் மொழி தமிழ்மொழிதான்!
27. இந்துமதத்தின் நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம் முதலிய அனைத்தும் வாழும் மொழி தமிழ்மொழிதான்!
28. இந்துமதத்தின் நவ நாதங்கள், பதினெண் சித்தங்கள், முப்பத்தாறு ஓதங்கள், தொண்ணூற்றுறு போதங்கள் முதலிய அனைத்தும் வாழும் மொழி தமிழ்மொழிதான்!

*[நகல் முழுமையாகக் கிடைக்கவில்லை]*

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல் சித்தரடியான் திரு இரா. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# மதம் மக்களுக்கு மருந்து

ஓம்

**பதினெண்சித்தர் மடம்**

**காரணோடை, சென்னை-67.**

கருவாக்கு, கருவாக்கியம், கருவாசகம்,
குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம்,
தருவாக்கு, தருவாக்கியம், தருவாசகம்,
திருவாக்கு, திருவாக்கியம், திருவாசகம்,
அருள்வாக்கு, அருள்வாக்கியம், அருள்வாசகம்,
மருள்வாக்கு, மருள்வாக்கியம், மருள்வாசகம்
எனும் பதினெட்டு இலக்கியங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வாசகங்கள்.

1. மதம் மக்களுக்கு மருந்து.
2. மதமே மக்களை ஒற்றுமையோடு வாழவைக்கும் அமுதம்.
3. மதச் சம்பிறதாயமே மக்களைக் காக்கும் காயகல்பம்.
4. மதச் சாத்தர சாத்திர சாத்திறங்களே மக்களை மக்களாக வாழச் செய்யும் சட்டதிட்டக் கட்டுப்பாடுகள்.
5. மதநெறி வளர்க்கும் அமைப்புக்களைப் பாதுகாத்துப் போற்றி வளர்த்திடுங்கள்.
6. மதமே மனிதகுல வரலாற்றுக் காப்பகம், மத வாழ்வே மன அமைதியையும், நிம்மதியையும், நிறைவையும் தருகிறது.
7. மதமே மக்களை ஒன்றுதிரட்டி ஒற்றுமைப்படுத்துகிறது.

8. மதமே இன வளர்ச்சிக்கு வளவளர்ச்சி வழங்குகிறது.
9. மதமே மொழி உரிமைக்கும், பெருமைக்கும் பாதுகாப்புத் தருகிறது.
10. மதமே சமுதாய விழிச்சியையும், எழிச்சிமிகு செழிச்சியையும் வளர்த்திடுகிறது.
11. மதமே மனச்சாட்சி மிகு நேர்மை வாழ்வை உருவாக்குகிறது.
12. மதமே முறையான நெறிமிகு நல்வாழ்வு தருகிறது.
13. மதமே அகம்பாவ ஆணவப் பேராசை நோக்குகளேயும், போக்குகளேயும் அகற்றுகிறது.
14. மதமே வம்பு வீம்பு ஊக்குகளே அழிக்கிறது.
15. மதமே தன்னம்பிக்கையுணர்வை ஊற்றெடுக்கச் செய்கிறது.
16. மதமே தன்மான உணர்வை விழிச்சிமிகு செழிச்சி பெறச் செய்கிறது.
17. மதமே இனமான உணர்வைச் செழிச்சி மிகு எழிச்சி நிலேயில் பேணிடுகிறது.
18. மதமே முன்னோர்களேப் போற்றிப் புகழ்ந்து வழிபடச் செய்கிறது.
19. மதமே மூத்தோர்களேப் பேணிப் பணிந்து வாழக் கற்றுத் தருகிறது.
20. மதமே சமத்துவ சகோதரத் தத்துவத்தை வளர்க்கிறது.
21. மதமே பொதுவுடமைச் சித்தாந்தத்தைப் போதிக்கிறது.
22. மதமே மனித வெறிகளேத் தணித்து மனிதப் பண்பாட்டைப் பேணுகிறது.
23. மதமே மனித அறிவியல் வளர்ச்சிக்கு ஆசாஞக விளங்குகிறது.
24. மதமே அரசியல் துறையின் தோற்றுவாயிலாக இருக்கிறது.
25. மதமே கலேகளுக்கு ஊற்றுக்கண்ஞக இருக்கிறது.
26. மதமே மானுட வாழ்வியலேப் புரியவைக்கிறது.
27. மதமே பிறப்பியலேத் தெளிவாக்குகிறது.

28. மதமே மனித வாழ்வுக்கு முழுமையான விளக்கம் தருகிறது.
29. மதமே மானுட ஐயங்களுக்கும் விடை தருகிறது.
30. மதமே மனித அச்ச இச்சை கூச்ச மாச்சரியங்களுக்கு முடிவளிக்கிறது.
31. மதமே மனித அறியாமைக்கும், புரியாமைக்கும் விடிவைத் தருகிறது.
32. மதமே கவலைகளுக்கு மருந்தாகிறது.
33. மதமே களிப்புக்களுக்கு விருந்தாகிறது.
34. மதமே மனநிறைவுக்கும், அமைதிக்கும், மகிழ்ச்சிக்கும் தாயாகிறது.
35. மதமே அன்பையும், பாசத்தையும், பற்றையும் ஊற்றெடுக்கச் செய்கிறது.
36. மதமே நட்பையும், தோழமையையும், உறவையும் போற்றி வளர்க்கக் கற்றுத் தருகிறது.
37. மதமே இல்லற வாழ்வின் வழியாக, வழித்துணையாக, வழிப்பயனாக விளங்குகிறது.
38. மதமே ஆசானாகவும், நண்பனாகவும், தோழனாகவும் விளங்குகிறது.
39. மதமே உறவுமுறையையும், உரிமைநெறியையும் கற்பிக்கிறது.
40. மதமே சாதிமத வேறுபாட்டு வெறிகளைத் தடுத்து அகற்றுகிறது.
41. மதமே பொருளாதார ஏற்றத்தாழ்வு வெறிகளைக் கண்டித்து ஒழிக்க முற்படுகிறது.
42. மதமே போதைப் பொருள்களை வெறுத்து மறக்கச் செய்கிறது.
43. மதமே மயக்கத் தயக்கங்களை மாய்த்து அழிக்கிறது.
44. மதமே தேக்க வீக்க முடக்க அடக்க ஒடுக்கங்களை அகற்றுகிறது.
45. மதமே மனிதருக்கு மனிதர் அடிமையில்லையென்று உணர்த்துகிறது.
46. மதமே ஒரு மொழியை மற்றொரு மொழி அடிமைப்படுத்துவதைத் தடுக்கிறது.

47. மதமே ஓர் இனத்தை மற்றோர் இனம் ஏமாற்றிச் சுரண்டுவதைத் தடுக்கிறது.
48. மதமே மொழியுரிமைக்கும், மொழிப் பெருமைக்கும் குரல் கொடுக்கிறது.
49. மதமே இனங்களின் உறவுக்கும், ஒற்றுமைக்கும் கை கொடுக்கிறது.
50. மதமே இலக்கிய வளவளர்ச்சிக்குக் கருவாகிறது.
51. மதமே விடுதலையுணர்வுகளுக்கு விதைப் பண்ணையாக விளங்குகிறது.
52. மதமே அடிமையுணர்வுகளுக்கும், அடிமைச் சிந்தனைகளுக்கும் சாவுமணி அடிக்கிறது.
53. மதமே தெரியாமை, அறியாமை, புரியாமை எனும் ஆமைகளுக்கு முடிவையளிக்கிறது.
54. மதமே பணம், பதவி, புகழ் எனும் மூவாசைகளை முறியடிக்கிறது.
55. மதமே ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றின் தனித்த நிலைகளை விளக்குகிறது.
56. மதமே ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றினை ஒருங்கிணைத்து ஒன்றுக்குகிறது.
57. மதமே முற்பிறவி, இப்பிறவி, மறுபிறவி எனும் மூன்றையும் விளக்குகிறது.
58. மதமே மனித வாழ்வின் வெற்றி தோல்விகளுக்கு விளக்கம் தருகிறது.
59. மதமே மனித வாழ்வின் இன்ப துன்பங்களுக்குக் காரணக் கருவியல்களை வழங்குகிறது.
60. மதமே சமுதாய அரசியல் வரலாறுகளுக்கு ஊன்றுகவும், சான்றுகவும் விளங்குகிறது.
61. மதமில்லா மனித வாழ்வு கரையில்லாக் காட்டாறு ஆகிடும்.
62. மதமில்லாக் கல்வி குருடன் பெற்ற ஓவியமாகும்.
63. மதமில்லா மனிதன் கடலலைத் துரும்பாவான்.

64. மதமில்லாக் குடும்பம் மாலுமி இல்லாக் கப்பலாகிடும்.
65. மதமில்லாச் சமுதாயம் தளபதி இல்லாப் படையாகிடும்.
66. மதமில்லாத நாடு மன்னனில்லாத நாடாகிடும்.
67. மதமே மனித வாழ்வின் உயிர்நாடி.
68. மதமில்லா அறிவியல் மனிதப் பண்பு இல்லாதவர்களையே உருவாக்கும்.

**அருட்பணி விரிவாக்கத் திட்டம்**

**தமிழின மொழி மத விடுதலை இயக்கம்.**

**நகல் எழுதியவர்:-**

அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம்,
சித்தரடியான் M.C.இராமன்,
248-K, இரயில்வே காலனி, மதுரை - 625010.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல் கையெழுத்துப் பிறதியாக சித்தரடியான் திரு மா.சி. இராமன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# குருபாரம்பரிய நூல்களின் தொகுப்பு

**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி**

**குருமகா சன்னிதானம் சித்தர் கருவூரூர்**

பாண்டிய அரச பாரம்பரியத்தின் பெருமை கூறும் வரலாறுன மகாபாரதத்தைத் ‘திங்கள் குல அரசபாரம்பரியம்’ என்றும்; சோழ அரச பாரம்பரியத்தின் பெருமை கூறும் வரலாறுன இராமாயணத்தைச் ‘சூரியகுல அரசபாரம்பரியம்’ என்றும்; சித்தர்களின் பாரம்பரியப் பெருமை கூறும் வரலாறுன பல நூல்களின் தொகுப்பே ‘குருபாரம்பரியம்’ என்றும் வழங்கப் பெறும்.

**“சாத்திறங்கள் ஐந்து நூல்கள் ஐந்து நிலைகள் எட்டு என இத்திறத்தே பதினெட்டும் குருபாரம்பரியமாயின”**

**சாத்திறங்கள் ஐந்து:-**

| | | |
|---|---|---|
| கன்னியர் சாத்திறம் | - | 7 |
| சித்தர் சாத்திறம் | - | 18 |
| கருப்பு சாத்திறம் | - | 18 |
| தேவர் சாத்திறம் | - | 33 |
| இருடி சாத்திறம் | - | 48 |

**நூல்கள் ஐந்து:-**

| | | |
|---|---|---|
| தவ நூல் | - | 18 |
| வேள்வி நூல் | - | 36 |
| ஞான நூல் | - | 54 |

| | | |
|---|---|---|
| சித்த நூல் | - | 72 |
| தத்துவ நூல் | - | 96 |

**<u>நிலைகள் எட்டு:-</u>**

| | | |
|---|---|---|
| சித்தர் படி நிலை | - | 6 |
| கோள் நிலை | - | 9 |
| இராசி நிலை | - | 12 |
| விண்மீன் நிலை | - | 27 |
| சித்தர் கலை | - | 64 |
| திருமால் நிலை | - | 108 |
| சத்தி நிலை | - | 243 |
| சிவ நிலை | - | 1008 |
| மொத்த நூல்கள் | = | 1877 |

'குருபாரம்பரியம்' எனும் சித்தர்களின் வரலாற்று நூல்களைத் தவிர இன்னும் நுண்கலை நூல்கள் (Minute arts), கவின்கலை நூல்கள் (Fine Arts), அறிவியல் நூல்கள் (Scientific books), சமய நூல்கள் (Religious Books), அரசியல் நூல்கள் (Political books), மருத்துவ நூல்கள் (Medical books), கட்டிட சாத்திற நூல்கள் (Engineering books), ... முதலிய இன்னோரன்ன பிற நூல்கள் முழுதும் அச்சிட்டு உலகறியச் செய்யும் பணி எமது பெரும்பணிகளில் ஒன்று.

**<u>அன்பு / சித்தர்</u>**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல் சித்தரடியான் திரு சேவுகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# குருபாரம்பரியம் தரும் ஆச்சரிய - மாச்சரியச் செய்திகள்

| | |
|---|---|
| ஆச்சரியம்: | ஆர்வமிக்க ஆக்கச் செயல்;<br>அன்பு நிறைந்த ஆதரவு;<br>பசுமை உறையும் செழுமை;<br>நெறியோடு மன்னித்தல்;<br>இரக்கத்தோடு அருளல்; |
| மாச்சரியம்: | ஆர்வமற்ற அழிவுச் செயல்;<br>வஞ்சமிகு பழிச் சொல்;<br>வறட்சிமிகு நாட்டம், நலிவு;<br>வெறியோடு வஞ்சம் தீர்த்தல்;<br>அரக்கப் போக்கில் வெறுத்தல், ஒறுத்தல் |

| | |
|---|---|
| ஆச்சரியச் செய்திகள்: | நம்பக்கூடிய செய்திகள் |
| மாச்சரியச் செய்திகள்: | நம்பமுடியாத செய்திகள் |
| ஆச்சரிய உணர்வு: | இன்ப உணர்வு |
| மாச்சரிய உணர்வு: | துன்ப உணர்வு |
| ஆச்சரியன்: | நல்லவை செய்பவன் |
| மாச்சரியன்: | அல்லவை செய்பவன் |
| ஆச்சரியச் சிந்தனை: | ஆக்கச் சிந்தனை (Constructive thoughts) |
| மாச்சரியச் சிந்தனை: | அழிவுச் சிந்தனை (Destructive thoughts) |
| ஆச்சரிய நெறி: | நீதிநெறி, அறவழி |
| மாச்சரிய நெறி: | அநீதி வெறி, தீயவழி |

| | |
|---|---|
| ஆச்சறிய நிலை: | மெய்ம்மை நிலை, வாய்மை நிலை, உய்வு நிலை. |
| மாச்சரிய நிலை: | பொய்ம்மை நிலை, இழிவு நிலை, அழிவு நிலை. |

# காதணி விழா

மொட்டையடித்துக் காதுகுத்தல், மஞ்சு விரட்டு நிகழ்த்தல், ஆயுதங்களையே வழிபடல் -

மண்ணின் தாகத்தை மனிதக் குருதியால் தணித்தல் - குருதிக் கொட்டிப் பூசை செய்தலே அறுதியிட்டு உறுதிப் பயன்களை நல்கும்.

# ஏழைகளின் பூசையா? கோழைகளின் பூசையா?

இந்துமதத்தின் அருளுலகில் ஏழைகள் இருக்க மாட்டார்கள்; ஆனால், கோழைகள் இருப்பார்கள். கோழைகளின் பூசையையே கருவறை மூலவர்கள் ஏழைகளின் மூலவர்களாக ஏற்றிடுவர்.

1. ஆக்கல், 2. அழித்தல், 3. காத்தல், 4. அருளல், 5. இரங்கல் எனும் ஐந்தே இந்துமதத்தின் அடிப்படைத் தத்துவங்கள். கோழைகள் இவற்றை அறிய, தெரிய, புரிய, ஆராய, உணர, தெளிய, நம்ப, ஒப்புக் கொள்ள ஏற்றுச் செயலாக்க இயலாதவர்களே! இவர்களே இந்துமதத்தின் ஏழைகள். இது '*<u>தத்துவத்தின் வறுமை</u>*' (The Poverty of the Philosophy) அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல! - இதுதான் வறுமையையும் விளக்கும், போக்கும், நீக்கும் தத்துவம்; எனவேதான், இது '<u>வறுமையின் தத்துவம்</u>' (The Philosophy of the Poverty).

வீரம் செறிந்தவர்கள் தங்களின் குழந்தைகளை 'இறைவனுக்கே' இந்துமத மூலவர்களுக்கே காணிக்கையாக வளர்த்து ஒற்றைப்படை எண்ணிக்கையுள்ள ஆண்டுக் கணக்கில் [1,3,5,7,9,11,13,15,17,19,21]

குலதெய்வத்தின் திருமுன்னர் கொண்டு சென்று முடியகற்றி [மொட்டையடித்து] நீராட்டி எந்தவித உலக பந்தபாசச் சொந்தச் சொத்துமின்றி நிறைமன நிலேயில் நிறுத்திக் காது இரண்டும் குத்திப் பசிய குருதித் துளியைக் கருவறை முன் காணிக்கையாக்கி அருளுலகப் பட்டியலில் தங்களின் குழந்தையையும் இடம் பெறச் செய்வார்கள். - <u>இதுவே காதணி விழா மொட்டையடிக்கும் விழா</u>.

- காது குத்திக் கொள்பவர் சிறுவராக இருந்தால் மொட்டையடித்து நீராட்டி நிர்வாணமாகத் தாய்மாமன் அல்லது மாமன் உரிமையுடையோர் அல்லது தாத்தா முதலியோர் மடியில் அமர்த்தியே காதுகுத்த வேண்டும். <u>மொட்டையடிக்கும் போது</u> தாய், தந்தை, இந்த உறவுடைய சின்னம்மா, பெரியம்மா, சித்தப்பா, பெரியப்பா முறையுடையோர் மடியில் அமர வைத்துத்தான் மொட்டையடித்தல் வேண்டும்.

சிறுவராக அல்லாமல் 5 வயதை விட அதிகமானவர்களாக இருந்தால் அவர்கள் மொட்டையடித்து நீராடிய பிறகு **<u>கோடித்துணி</u>** புதிய துணிகள் அணிந்து கொண்டு காதுகுத்திக் கொள்ளலாம். <u>ஏனெனில்</u>, கோடித்துணி அணிந்திருப்பது நிர்வாண நிலேயாகவே கருதப்படும்.

* சிறு குழந்தைகளுக்கும் 5 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் மொட்டையடித்து நீராட்டிய பின் கோடித்துணி அணிவித்துக் காதுகுத்துவது தவறில்லே.

காது குத்திய பிறகே தலேயில் சந்தனம், பன்னீர், இளநீர், உராய்ந்த வெள்ளியின் நீர் + ஆமை ஓடு + தேன் => மூளேப் புத்துயிர்ப்பு; அல்லது ஆவி, ஆன்மா, உயிர் எனும் மூவிலேப் புத்துயிர்ப்பு.

# <u>குறிப்பு</u>:- மொட்டையடித்துக் காது குத்துவதன் மூலமே ஆவி, ஆன்மா, உயிர் என்ற மூன்றும் தங்களின் ஊழ்வினே, வினே,

ஆள்வினை (விதி) என்ற மூன்றிலிருந்தும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றிலிருந்தும் முட்டையை உடைத்துக் கொண்டு வெளிவரும் குஞ்சு போல் வெளிவந்து முளைக்கின்றன.

இப்படி முளைப்பவை கருவின் பயனாலும், திருவின் அருளாலும் தக்க குருவைத் துணையாகப் பெற்றுச் செயல்பட ஆரம்பித்திடுவார்கள். இதனையே பெரியோர்கள் குழந்தைகளைத் திட்டும்பொழுது:-

“இன்னும் நீ முளைத்து மூன்று
இலைக் கொள்ளவில்லை (அடையவில்லை)”

என்று திட்டுகின்ற ‘மூதுரை’, ‘முதுமொழி’, ‘பழமொழி’ ... குறிப்பாக விளக்குகிறது.

“... மொட்டையடித்துக் காதுகுத்தி மூன்றிலை கொண்டவரே (பசு, பதி, பாசம்) 1.உயிர், 2.இறை, 3.தளை என்று மூன்றையும் துய்த்து உய்வு பெற முடியும்” - என்று குருபாரம்பரியம் கூறுகிறது.

# <u>இறைச்சியும் இறைவனும்</u>

‘இறைச்சி’ என்ற சொல்லுக்கே ‘இறைவன்’, ‘தலைவன்’, ‘மேலோன்’, ‘முதல்வன்’, ‘மூலவன்’, ‘எல்லாமாக இருப்பவன்’, ‘எங்கும் நிறைந்தவன்’, ‘நிறைவை உடையவன்’, ‘முழுமையானவன்’, ... என்று பல பொருள்கள் சித்தர்களின் நூல்களில் குறிக்கப்படுகின்றன.

‘இறைச்சியுணவைப் படையலாகப் படைத்து இயவுளின் அருளைப் பெறுவதே இறைமை’

‘இறைமையாற்றலை வழங்கும் இறைவன் இறைச்சியுணவின் அவிர்ப்பலியில் நேரில் தோன்றுவான்’

"“[1]ஓமம், [2]ஓகம், [3]யாகம், [4]யக்ஞம், [5]வேள்வி, [6]தவம், [7]ஞானம், [8]மாந்தரீகம் எனும் எட்டினையும் சூரியகுலத்தார் இறைச்சிப் படையலின் மூலமே சித்தி செய்வர்.”

‘[1]நேமம், [2]நியமம், [3]நிடதம், [4]நிட்டை, [5]சுருதி, [6]ஆரணம், [7]ஆகமம், [8]மீமாம்சை, [9]தாந்தரீகம், [10]ஏந்தரீகம் எனும் பத்தினையும் சந்திர குலத்தார் இறைச்சிப் படையலின் மூலமே சித்தி செய்வர்’

“பதினெண்சித்தர்களின் மேற்கூறிய பதினெட்டுப் (18) பூசைமுறைகளும் இறைச்சி உணவுப் படையலின் மூலமே இறைமை பெற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றன.”

**குருவாக்கு, குருவாசகம், குருபாரம்பரியம்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: முதல் இரண்டு பக்கங்கள் சித்தரடியான் திரு சி. கவிக்குமார் அவர்களின் கையெழுத்திலும், அடுத்த இரு பக்கங்கள் சித்தரடியான் திரு ஏ. இரவி அவர்களின் கையெழுத்திலும் இருந்தது. இது ‘குருதேவர்’ அறிக்கைக்காக 1982-83இல் அச்சிடுவதற்குத் தயாரித்த பகுதிகள்.//**

# இந்துக்களின் வாழ்வு மறுமலர்ச்சி அடையப் பாடுபடுதல்

*//இ.மு.க. லெட்டர் பேடில் எழுதப்பட்டு இருந்தது.//*

நாள்: 2-12-1996

அன்புடையீர்!

1) வணக்கம். தாங்கள் என்றென்றும் நலமுடன் வாழ வாழ்த்துக்களையும், ஆசிகளையும் உமக்கே உரித்தாக்குகிறோம். தங்களிடம் நீண்ட காலமாக கடிதத் தொடர்பு கொள்ள எண்ணியிருந்தோம். முகவரி கிடைக்கப் பெறாததால் தொடர்பு கொள்ள இயலவில்லை. தற்பொழுது மதுரை சித்தரடியான்கள் மூலமாக தங்களது முகவரி கிடைக்கப் பெற்று தங்களுக்கு கடிதம் எழுத முற்படுகிறோம்.

2) இந்துமதம் ஒன்றுதான் உலக மதங்களுக்குள் முதன்மையான மதம்; உலகிற்கு நாகரிகம், இலக்கியம், அரசியல், வாழ்வியல் கோட்பாடுகள் ஆகிய அனைத்தையும் உருவாக்கியது இந்துமதமே என்பதை இந்துக்களுக்கு உணர்த்துவதற்கு கடந்த சில பல ஆண்டுகளாக முயற்சி செய்து சித்தரடியான்களை, இந்துமதப் பற்றாளர்களை, இந்துமத ஆர்வலர்களை உருவாக்கியிருக்கிறோம்.

இந்துமதம் பற்றிய உண்மைகளை நீண்டகாலம் ஆராய்ச்சி மேற்கொண்டு பதினெண்சித்தர் மடம் மூலமாக புத்தகங்களாக வெளியிட்டுள்ளோம். இந்துக்கள் அனைவரையும் ஒன்றாக இணைத்து இந்துமத மறுமலர்ச்சியைப் பெறச் செய்திட முயற்சிகள் மேற்கொண்டு

செயல்பட்டுக் கொண்டு வந்துள்ளோம். தாங்களும் இந்துமதத்தினைப் பற்றிய உண்மைகளையும், வரலாறுகளையும் புரிந்து, தெரிந்து செயல்பட வாழ்த்துகிறோம்.

அனைவருக்கும் வாழ்த்துக்களையும், ஆசிகளையும் வழங்குகிறோம்.

இந்துமதம் பிழைக்க உழைக்கக் கூடிய செயல்வீரர்கள் கூட்டத்தை ஒன்று திரட்டும் பணியில் குருதேவர், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் நெடுங்காலமாக பல்வேறான முயற்சிகளை செய்து வருகிறார். சில மாதங்களுக்கு முன்னால் தங்களைப் பற்றிய செய்தி பல வெளியீடுகளில் வந்தன. அன்றிலிருந்து உங்களை பதினெண்சித்தர் மடத்திற்கு வரவழைக்க திருமடத்தில் அடியார்கள் பல்வேறு வகையாக முயன்றார்கள்.

3) அண்மையில்தான் உங்களுடைய முகவரியும், திரு ஸ்ரீதர் அவர்களின் முகவரியும், மதுரையில் உள்ள திரு க. அன்பழகன், திரு G.R. ஞானசம்பந்தன் ஆகியோரின் முகவரிகள் கிடைத்தன. உடனடியாக குருபீடத்தின் திருவுளச் சம்மதம் பெற்று இத் திருவோலை அனுப்பப்படுகிறது. தாங்கள் இளைஞர்களை ஒன்றுதிரட்டினால் இந்துக்களை ஒற்றுமைப்படுத்துவதையும், இந்து மத மூட நம்பிக்கைகளை அகற்றுவதையும் விரைந்து விரிந்து செயலாக்கிட முடியும்.

4) அன்புடையீர், இருப்பதோ ஒரே ஒரு இந்துமதம். இதனை நாத்திகர்கள், மாற்று மதத்தவர்கள், அறியாமை மிக்கவர்கள், ... முதலியவர்களிடமிருந்து இந்துமதத்தை காப்பாற்ற; பல்வேறு ஒன்று சேரா நிலையைக் காத்து வருகிற நாடுதழுவிய இந்துக்களின் நிறுவனங்களின் கருத்துப் பரிமாற்றச் சிந்தனை அரங்கங்கள் மூலம்தான் செயல்படுத்த முடியும்!

5) இதற்காகவே குருமகாசன்னிதானம் பல்லாயிரக்கணக்கான அஞ்சல்வடிவக் கட்டுரைகளை எழுதியும், அறிக்கைகளை

நூறுயிரக்கணக்கில் அச்சிட்டும், சில நூறு நூல்களுக்கு மேல் வெளியிட்டும், சில ஆயிரக்கணக்கான சித்தரடியார்களை தோற்றுவித்தும் செயல்பட்டு வருகின்றூர்.

6) இருந்தும் மாநிலம் தழுவிய நிறுவன நிர்வாகங்களை புதிய புதிய கட்டமைப்புக்களோடு உருவாக்கும் பணி முழுமையாக நிறைவேற்ற முடியாமல் தேங்கி தங்கிக் கிடக்கின்றன.

7) இன்றைய நிலையில் மதமாற்றங்களைத் தவிர்ப்பதற்கும், இந்துக்களின் மெய்யான வரலாற்றுப் பேருண்மைகளை வெளியிடவும் வேண்டுமானல் தேவையான எல்லா சத்திகளையும் இளைஞர்கள் மூலம்தான் நிறைவேற்ற முடியும்.

8) அதற்கு உங்களைப் போன்ற செயல்வீரர்கள்தான் பெரும் துணையாகவும், பேருதவியாகவும் இருந்திட முடியும்.

9) நமது கொள்கையும், குறிக்கோளும் இந்துமதத்தின் பாதுகாப்புக்கும், தூய்மைக்கும், வாய்மைக்கும் போராடுவதுதான். இவற்றை யார் செய்தாலும் ஒன்றுதான்.

10) அதாவது நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து செயல்பட்டிட வேண்டும். நமக்குள் பயனற்ற தேவையற்ற வேற்றுமை உணர்வுகளும், போட்டி உணர்வுகளும், வெறுப்பு உணர்வுகளும் தொடர்ந்து வளர்ந்து வருவதுதான் இந்துக்களையும், இந்துமதத்தையும் வலிமைப்பட முடியாமல் செய்கின்றன.

11) தங்களைச் சேர்ந்தவர்களும், நமது மடத்து சித்தரடியான் சித்தரடியாள் சித்தரடியார் திருக்கூட்டமும் இணைந்து பல்வேறு இந்துமதம் காக்கும் நிகழ்ச்சிகளை நிகழ்த்திட்டால் கண்டிப்பாக இந்துமதத்தினை வலிமைப்படுத்தும் பணிகளைச் செய்திட முடியும்.

12) தாங்களும் தங்களைச் சேர்ந்தவர்களும் நமது மடத்து சித்தரடியான்களும் திருவிளக்கு பூசை, யாகபூசை, கணபதி ஓமம், பரிகாரப் பூசைகள், கோயில் புத்துயிர்ப்புகள், புதிய பழைய கோயில்களுக்கு குடமுழுக்கு பூசைகள் செய்தல், மாற்று மதத்தவரை விமரிசிக்காமல் நமது இந்துக்களை சிறந்த இந்துவாக வாழச் செய்தல், மேடைப் பேச்சுகள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், ... முதலியவற்றின் மூலம் இந்துக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியும், மலர்ச்சியும், செழுச்சியும் நிகழ்ந்திடப் பாடுபட முடியும்.

தங்களின் பதிலையும், வரவையும் எதிர்பார்க்கிறது பதினெண்சித்தர் மடம்.

திருவோலை நாயகம்:

சித்தரடியார் சோ. மாரிமுத்து B.Com.

**ஒப்பம்**

**அந்தணர் அண்ணல்,**

**ஞானாச்சாரியார்.**

**2/12/96.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாக இருந்தது. இதன் இறுதியில் குருதேவர் அவர்களின் கையொப்பம் இருந்தது.//**

# இந்துக்களிடையே மறுமலர்ச்சிச் சிந்தனைகளை உருவாக்குதல்

*//இ.மு.க. லெட்டர் பேடில் எழுதப்பட்ட அஞ்சல்//*

பெறுநர்:-

திரு த. அன்பழகன் அவர்கள்,
திரு G.R. ஞானசம்பந்தன்,
திருப்பரங்குன்றம், மதுரை - 625005.

பேரன்புடையீர்,

1) தங்கள் இருவரின் முகவரியும் கோவை மாநகரில் உள்ள திரு அர்ச்சுன் சம்பத், மற்றும் திரு ஸ்ரீதர் முகவரிகளும் ஒரே சமயத்தில் கிடைத்தது. கோவைக்கும் தங்களுக்கும் அஞ்சல்கள் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் பதினெண்சித்தர் மடத்திலிருந்து எழுதப்பட்டுள்ளன.

2) இத் திருமடத்தின் குருபீடம் <u>'இந்துக்களிடையே ஒற்றுமை இல்லாதது ஏன்?', 'இந்துக்களிடையே பிரிவினை உணர்ச்சிகள் அதிகம் வளர்ந்து வருவது ஏன்?', 'இந்துக்களிடையே நாத்திகர்கள் அதிகம் இருப்பது ஏன்?'</u> ... என்பன போன்ற வினாக்களை எழுப்பி இந்துக்களிடையே மறுமலர்ச்சி சிந்தனைகளை எழுச்சி பெறச் செய்து வருகிறார்.

3) இந்த அடிப்படையில்தான் உங்களைப் போன்ற இளைஞர் சமுதாயத்தை ஒன்றுதிரட்டும் முயற்சியில் திருமடம் ஈடுபட்டு வருகிறது.

4) அதன் பயனாகத்தான் இத் திருவோலை தங்களுக்கும் எழுதப் பட்டுள்ளது.

5) படித்தவர்கள், பகுத்தறிவாளர்கள், பத்தியுணர்வு மிக்கவர்கள், இந்துமதப் பற்றாளர்கள், அருளாளர்கள், ... முதலியவர்களை எல்லாம் ஒன்றுதிரட்டும் பணியில் தொடர்ந்து அரை நூற்றாண்டுக் காலமாக ஈடுபட்டு வருகிறது, ஞாலகுரு குருமகாசன்னிதானம், ஞானாச்சாரியார் அவர்களின் பதினெண்சித்தர் மடம். இந்த மடத்தின் செயல்வீரர்களாக திருமடத்து அடியான்கள் இருக்கிறார்கள்.

6) இவர்களின் மூலம் ஆங்காங்கே கோயில்களிலும், அருட்கோட்டத்திற்காக அமைக்கப்படும் யாகசாலைகளிலும் வேற்று மதத்து மந்திரவாதிகளின் பிடிகளிலிருந்து விடுபடக் கூடிய பரிகாரங்கள், பாதுகாப்புக்கள், அருளூறும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

7) நமது மதத்தில் உள்ள சிறுவர் முதல் பெரியவர் வரை மாற்று மதத்து கோயில்களுக்கும், மந்திரவாதிகளுக்கும், பூசாறிகளுக்கும் அடிமையாக இருக்கிறார்கள். அதாவது குழந்தை முதல் பெரியவர் வரை எத்தகைய பாதிப்பு ஏற்பட்டிட்டாலும் மந்திரித்துக் கொள்ள, முடிகயிறு, சக்கரங்கள், தாயத்துக்கள் பெற்றுக் கொள்ள மாற்று மதத்தைத்தான் நாடுகிறார்கள்.

8) இத்தகைய அவல, கேவல நிலைகள் உடனடியாக மாற்றப் படுவதற்காக நமது பூசாறிகளை எல்லாம் ஒன்று திரட்டி அருளுலகப் பயிற்சி வழங்க வேண்டும்.

9) இவற்றிற்கெல்லாம் இந்துமத வேதங்களின் அடிப்படையில் பகுத்தறிவு பூர்வமான விளக்கங்கள் வழங்கப்பட்டும், புத்தகங்களாக வெளியிடப்பட்டும் வருகின்றன.

10) இவற்றுக்கும் மேலாக இன்று வாழும் நமது பூசாறிகளை எல்லாம் ஒன்று திரட்டியும்; அருளுலகத்தில் அக்கறையும், ஆர்வமும் உள்ளவர்களை எல்லாம் ஒன்றுதிரட்டியும்; மாநாடுகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், விவாத மேடைகள், வழக்காடு மன்றங்கள், ... முதலியவைகளை நிகழ்த்துவதன் மூலம்தான் இந்துக்களிடையே உள்ள அவநம்பிக்கைகளையும், மறுப்புணர்வுகளையும், வெறுப்புணர்வுகளையும் முழுமையாக அகற்றிட முடியும்.

11) இதற்காகத்தான் **'இந்துக்களை இந்துக்களாக வாழச் செய்ய வேண்டும்', 'இந்துக்களுக்கு இந்துமதத்தின் மீது நம்பிக்கையும் மதிப்பும், மரியாதையும் ஏற்படும்படிச் செய்ய வேண்டும்.'**

12) நமது இந்துமதத்தில் உள்ள கருத்துக்களும், எண்ணங்களும், சிந்தனைகளும் சிறப்பாக வளர்ச்சியுற்றிட; இந்துமத இளைஞர்களை, மாணுக்கர்களை, வயது முதிர்ந்தோர்களை எல்லாம் ஒன்றுதிரட்டி ஆங்காங்கே நாடு முழுவதும் பரவலாக பயிற்சி முகாம்கள் நிகழ்த்துதல் வேண்டும். இதையொட்டியே 'இந்துமதப் பயிற்சி முகாம்கள்' நம் நாட்டுப் பூசாறிகளுக்கும் நடத்தப்படல் வேண்டும்.

13) இவற்றையெல்லாம் தங்களைப் போன்ற இளைஞர்கள் முன் நின்று நிகழ்த்திட வேண்டும்.

14) தமிழ்நாடுதான் இந்துமதத்தின் பிறப்பிடம், இருப்பிடம், பாதுகாத்திடும் இடம், வாழ்ந்து வரும் இடம்.

15) பேரன்புடையீர், இந்துமதத்தின் முழக்கங்களும், கொள்கைகளும், குறிக்கோள்களும், வரலாறுகளும், சாத்திறங்களும், வேதங்களும் அச்சேற்றி மக்களிடையே வழங்கப்படுவதன் மூலம் நமது முயற்சிகளுக்கு மிகப் பெரிய வெற்றியினை தேடித் தரமுடியும். எனவே, நீங்கள் திருமடத்தின் குருபீடத்தை சந்திக்க வேண்டும். திருமடத்தின் பீடாதிபதியும் மடாதிபதியும் ஆன ஞாலகுரு சித்தர் அரசயோகிக்

கருவூரார் அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் தங்களை யெல்லாம் சந்திக்க விரும்புகிறார். இதற்காக பதினெண்சித்தர் மடத்தின் சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், சித்தரடியார்கள், ... முதலியவர்களை யெல்லாம் தங்களைப் பார்க்க விரைந்து விரிந்து உரிய முயற்சிகளை மேற்கொண்டு உள்ளனர்.

எல்லாம் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன் திருவருளே!

வெற்றி நமதே! நாளை நமதே!

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

<u>திருவோலை நாயகம்:</u>

சித்தரடியான் சோ.மாரிமுத்து B.Com.

**ஒப்பம்**
**அந்தணர் அண்ணல்,**
**ஞானச்சாரியார்,**
**3/12/96.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாக இருந்தது. இறுதியில் குருதேவர் அவர்களின் கையொப்பம் இருந்தது.//**

## பதினெண்சித்தர் மடம்

## பதினெண்சித்தர் நெறிப் பள்ளி

# கூடுவிட்டுக் கூடுபாய்தல்

## விளங்கிக் கொள்வோம்!

(1) இருக்கின்ற சித்திகளிலே மிக உயர்ந்த சித்தியென்று கருதப்படுவது 'கூடுவிட்டு கூடு பாய்தல்' என்பதாகும்.

சிறப்பு:- (a) அருணகிரிநாதர், (b) ஆதிசங்கராச்சாரியார் வாழ்க்கை நினைவுகூரத் தக்கது.

'மந்திரமும் மருந்தும் மனிதனின் கண்கள்'

மருந்து:-

I. 9 நாள் சிறுகுறிஞ்சா ஒரு சரங்கை (Teaspoon)
   9 நாள் சிறியாநங்கை ஒரு சரங்கை

II. 12 நாள் சிறுகுறிஞ்சா ஒரு சரங்கை
   12 நாள் சிறியாநங்கை ஒரு சரங்கை

III. 21 நாள் சிறுகுறிஞ்சா ஒரு சரங்கை
   21 நாள் சிறியாநங்கை ஒரு சரங்கை

IV. 27 நாள் சிறுகுறிஞ்சா ஒரு சரங்கை
   27 நாள் சிறியாநங்கை ஒரு சரங்கை

V. 36 நாள் சிறுகுறிஞ்சா ஒரு சரங்கை
   36 நாள் சிறியாநங்கை ஒரு சரங்கை

VI. 39 நாள் சிறுகுறிஞ்சா ஒரு சரங்கை
   39 நாள் சிறியாநங்கை ஒரு சரங்கை

VII 45 நாள் சிறுகுறிஞ்சா ஒரு சரங்கை
45 நாள் சிறியாநங்கை ஒரு சரங்கை
VIII 48 நாள் சிறுகுறிஞ்சா ஒரு சரங்கை
48 நாள் சிறியாநங்கை ஒரு சரங்கை

**குறிப்பு:-**

(a) தேனீர் மற்றும் சூடான பானங்கள் கூடாது. (Tea, Coffee)

(b) 11 மணிக்கு மேல் (பகல்), காலை உணவு உண்ண வேண்டும்.

(c) கரப்பான் பண்டம் கூடாது.

(d) கோழி உணவில் இருக்கலாம்.

(பயிற்சியும் மந்திரமாக இருந்தால் கூடும்; மருந்தாக இருந்தால் கூடாது.)

**- உரிய பயிற்சியைக் குருவழிக் காண்க!**

**சிறப்புக் குறிப்பு:-**

**சரங்கை:** கைவிரலின் முதல் ரேகை அளவு

நான்கு விரலிலும் சேர்ந்து **ஒரு கைவிரல் அளவு.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல் சித்தரடியான் திரு சி. கவிக்குமார் அவர்களின் கையெழுத்தில் இருந்திட்டது.//**

# காவிரியாற்றங்கரைக் கருவூரூரின் குருவாசகம்

"..ஆரியர்களால் அடிமைப்படுத்தப்பட்டு அறியாமைச் சேற்றில் அழுந்திக் கிடக்கும் தமிழினத்தைக் காப்பாற்றுவது என்பது இமயமலையை விடப் பலகோடி மடங்கு பெரிய ஒரு செயலாகும். ஏனெனில், தமிழினத்தின் வீழ்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும் தமிழர்கள்தான் காரணமாக உள்ளார்கள். தமிழினத்தைக் காக்க முற்படக் கூடிய தமிழனையெல்லாம் தன்னம்பிக்கையிழக்கச் செய்பவர்கள் தமிழர்களாகவே உள்ளார்கள். தமிழினப் பகைவர்கள் சிரித்துக் கொண்டே சூழ்ச்சி செய்து தமிழினமென்றென்றும் தன் பெருமையையும் உரிமையையும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதபடி செய்கிறார்கள். ஆனால், அந்தத் தமிழினப் பகைவர்களின் ஆதரவாளர்கள் கோபமும், கொடுமையும் காட்டி வேகத்தோடும் விறுவிறுப்போடும் தமிழினப் பற்றையும், ஒற்றுமையையும் சிதைத்து தங்களின் கடமையை நிறைவு செய்கிறார்கள். எனவேதான் தமிழின ஒற்றுமையோ, விழிச்சியோ, எழுச்சியோ, மறுமலர்ச்சியோ ஏற்படுத்துவது எளிதல்ல என்று கூற நேரிட்டுள்ளது...."

**//தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூரின் குருவாணை எனப்படும் குருவாசகத்தில் இரண்டாவது பகுதியில் 124வது வாசகத்திலிருந்து ஒரு சில வரிகள்.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி






12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

"... இந்துமதம் ஒன்றுதான்
உலக மதங்களுக்குள் முதன்மையான மதம், உலகிற்கு நாகரிகம், இலக்கியம், அரசியல், வாழ்வியல் கோட்பாடுகள் ஆகிய அனைத்தையும் உருவாக்கியது இந்துமதமே என்பதை இந்துக்களுக்கு உணர்த்துவதற்கு கடந்த சில பல ஆண்டுகளாக முயற்சி செய்து சித்தரடியான்களை, இந்துமதப் பற்றாளர்களை, இந்துமத ஆர்வலர்களை உருவாக்கியிருக்கிறோம். இந்துமதம் பற்றிய உண்மைகளை நீண்டகாலம் ஆராய்ச்சி மேற்கொண்டு பதினெண்சித்தர் மடம் மூலமாக புத்தகங்களாக வெளியிட்டுள்ளோம். இந்துக்கள் அனைவரையும் ஒன்றாக இணைத்து இந்துமத மறுமலர்ச்சியைப் பெறச் செய்திட முயற்சிகள் மேற்கொண்டு செயல்பட்டுக் கொண்டு வந்துள்ளோம்..."

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ15/-